# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 23.10.2018 | 1) தூத்துக்குடி மாநகராட்சி– பொது சுகாதாரம்–திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மாநகராட்சி வார்டு பகுதிகளில் 16 நுண் உரக்கிடங்கு அமைத்து டாடா ஏஸ் (TATA ACE) வாகனம் நான்காம் கட்டமாக வாங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களுக்கு மாநகராட்சியில் போதிய ஓட்டுனர்கள் இல்லாததால் மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்டுள்ள நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் தற்காலிகமாக 13 வாகன ஓட்டுனர்களை பணியமர்த்திக்கொள்ளவும் மற்றும் புதிதாக வாங்கப்பட்டுள்ள TN69 BF 5049 மண் அள்ளும் வாகனத்திற்கு (Sand Sweeping Vehicle) 2 வாகன ஓட்டுநர்களை பணியமர்த்திக்கொள்ளவும் அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்வும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/296/2018 | 172) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்ட்டது |
| | 2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17018/2018/குவ1, நாள் 23.08.2018ல் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை 2018–2019ம் அண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34ற்கான விவாதத்தின்போது, மாண்பிமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு எண். 14ல் “ மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) நிறுவப்படும்” என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.<br>இதன்படி அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள வார்டுகளில் ஒவ்வொரு தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைக்க உரிய இடம் தேர்வு செய்து அதனை நகர் வரைபடத்தில் குறியீடு செய்து ஒவ்வொரு தானியங்கும் குடிநீர் மையங்களும் குடிநீர் வழங்கக்கூடிய பகுதிகளை வெவ்வேறு வண்ணங்களில் குறிப்பிட்டும் வரைபடம் தயாரித்து உடனடி பார்வைக்கு தயாராக வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 173) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்ட்டது |

அவ்வாறு தேர்வு செய்யப்படும் இடங்கள் அம்மா உணவகங்கள் அருகிலோ, அரசு மருத்துவமனை, பேருந்து நிலையம் மற்றும் கடைவீதிகள் அருகிலோ, வீட்டு பகுதிகளை பொறுத்தவரை சிறு மின்விசை பம்புகள் உள்ள இடமோ, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி உள்ள இடமோ அல்லது உள்ளாட்சி அமைப்புகள் ஒப்படைக்கப்பட்ட திறந்தவெளியிடமாகவோ இருக்குமாறு தேர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சி பொருத்தமட்டில் 60 வார்டுகளில் முதற்கட்டமாக கீழ்க்கண்ட 20 இடங்களில் தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | **மேற்கு மண்டலம்** |
|---|---|---|
| 1 | 34 | மடத்தூர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி |
| 2 | 36 | மில்லர்புரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி |
| 3 | 38 | எஸ்.என். பார்க் (அம்மா உணவனம் அருகில்) |
| 4 | 41 | ராஜாஜி பார்க் (அம்மா உணவகம் அருகில்) |
| 5 | 46 | லெவிஞ்சிபுரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி |
| | | **கிழக்கு மண்டலம்** |
| 6 | 26 | பேபி ஹோம் நீர்நிலை நீர்த்தேக்க தொட்டி |
| 7 | 15 | விவிடி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி |
| 8 | 33 | ஜார்ஜ் ரோடு அம்மா உணவகம் |
| 9 | 26 | ஜிஎல்ஆர் ரெயில்வே ஸ்டேஷன் சாலை |
| 10 | 16 | குருஸ்புரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி |
| | | **வடக்கு மண்டலம்** |
| 11 | 5 | முத்தம்மாள் காலனி (சமுதாய கூடம்) |
| 12 | 2 | தனசேகர நகர் பார்க் |
| 13 | 18 | கலைஞர் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (ரோசம்மாள் பள்ளி பின்புறம்) |
| 14 | 12 | கருப்பட்டி சொசைட்டி கார்னர் |
| 15 | 11 | சுப்பையா பார்க் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி |
| | | **தெற்கு மண்டலம்** |
| 16 | 50 | முடுக்கு காடு (பள்ளி அருகில்) |
| 17 | 51 | வீரநாயக்கன்தட்டு (பள்ளி அருகில்) |
| 18 | 52 | முத்தையாபுரம் பஞ்சாயத்து அலுவலகம் |
| 19 | 53 | அத்திமரப்பட்டி அங்கன்வாடி மையம் |
| 20 | 58 | முள்ளக்காடு நுலகம் (பேருந்து நிறுத்துமிடம்) |

மேற்கண்ட 20 இடங்களில் தானியங்கும் குடிநீர் மையங்களை தனியார் தொழில் நிறுவனத்தின் நிதி ஆதாரம் மூலம் நிறுவி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முறையில் (DBFOT) செயல்படுத்த ஏதுவாக அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் நிறுவனங்களிடம் விருப்ப கேட்பு (Expression of interest) கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.03718/18/இ2

| | | |
|---|---|---|
| | 3.இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள தெற்கு மண்டல பகுதிகளில் கோடை காலத்தில் வறட்சியை போக்கவும் குடிநீர் பற்றாக்குறையை சமன்செய்ய பொதுமக்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு வடக்கு மண்டல பகுதிகளில் 0 முதல் 20 கி.மீ. க்குள் கொண்டு சென்னை குடிநீர் வழங்கும் பணிகளுக்கு 02.05.2018ல் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப உறை அன்று திறக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் சரிபார்க்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு 04.05.2018 அன்று தொழில்நுட்ப கமிட்டிக்கு பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு விலைப்புள்ளி உறை 21.05.2018 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1. மெசர்ஸ் சித்ராதேவி வாட்டர் சப்ளையர்ஸ்<br><br>மதிப்பீட்டைவிட 25.39 சதவிகிதம் அதிகம் ( ரூ. 25,38,200.00)<br>வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 25.39 சதவிகிதம் (ரூ. 25,38,200.00) அதிகமாக கொடுத்துள்ளார். மெசர்ஸ். சித்ராதேவி வாட்டர் சப்ளையர்ஸ் அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டைவிட 3.95 சதவிகிதம் (21,04,300.00/–) அதிகம் கொடுத்துள்ளார். பொறியியல் கையேடு சேப்டர் II எண் 27.2ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5.00 சதவிகிதம் வரை அதிகம் அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டை விட 3.95 சதவிகிதம் கொடுத்ததை மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1) பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/1348/2018 | 174) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 4. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள கிழக்கு மண்டல பகுதிகளில் கோடை காலத்தில் வறட்சியை போக்கவும் குடிநீர் பற்றாக்குறையை சமன்செய்ய பொதுமக்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு வடக்கு மண்டல பகுதிகளில் 0 முதல் 20 கி.மீ.க்குள் கொண்டு சென்று குடிநீர் வழங்கும் பணிகளுக்கு 02.05.2018ல் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் தொழில் நுட்ப உறை அன்று திறக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் சரிபார்க்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு 04.05.2018 அன்று தொழில்நுட்ப கமிட்டிக்கு பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு விலைப்புள்ளி உறை 21.05.2018 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1) மெசர்ஸ் சித்ராதேவி வாட்டார் சப்ளையர்ஸ்<br>2) மதிப்பீட்டைவிட 20.50 சதவிகிதம் அதிகம் (ரூ. 22,01,500.00)<br>வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 20.50 சதவிகிதம் (ரூ. 22,01,500.00) அதிகமாக கொடுத்துள்ளார். மெசர்ஸ் சித்ராதேவி வாட்டர் சப்ளையர்ஸ் அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.99 சதவிகிதம் (19,18,100.00) அதிகம் கொடுத்துள்ளார். பொறியியல் கையேடு சேப்டர் II எண். 27.2ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5.00 சதவிகிதம் வரை அதிகம் அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டள்ளது. எனவே மதிப்பீட்டை விட 4.99 சதவிகிதம் கொடுத்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/ 1346/2018 | 175) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 5) இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள மேற்கு மண்டல பகுதிகளில் கோடை காலத்தில் வறட்சியை போக்கவும் குடிநீர் பற்றாக்குறையை சமன்செய்ய பொதுமக்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு வடக்கு மண்டல பகுதிகளில் 0 முதல் 20 கி.மீக்குள் கொண்டு சென்று குடிநீர் வழங்கும் பணிகளுக்கு 02.05.2018ல் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் தொழில் நுட்ப உறை அன்று திறக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் சரிபார்க்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு 04.05.2018 அன்று தொழில்நுட்ப கமிட்டிக்கு பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு விலைப்புள்ளி உறை 21.05.2018 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1) மெசர்ஸ் சித்ராதேவி வாட்டார் சப்ளையர்ஸ்<br>2) மதிப்பீட்டைவிட 27.06 சதவிகிதம் அதிகம் (ரூ. 22,84,380.00)<br>வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 27.06 சதவிகிதம் (ரூ.22,84,380.00) அதிகமாக கொடுத்துள்ளார். மெசர்ஸ் சித்ராதேவி வாட்டர் சப்ளையர்ஸ் அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 3.69 சதவிகிதம் (18,64,200.00) அதிகம் கொடுத்துள்ளார். பொறியியல் கயேடு சேப்டர் II எண். 27.2ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5.00 சதவிகிதம் வரை அதிகம் அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டை விட 3.69 சதவிகிதம் கொடுத்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/ 1346/2018 | 176) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 6.இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி – TURIP 2018-19 சிப்பம் 1ல் வார்டு எண். 33க்குட்பட்ட புல்தோட்டம் மற்றும் டெலிபோன் காலனி, வார்டு எண் 10க்குட்பட்ட பூபாலராயர்புரம் மார்க்கெட் ரோடு, வார்டு எண். 17 மற்றும் 18க்குட்பட்ட லூர்தம்மாள்புரம் மெயின் ரோடு வார்டு எண். 18க்குட்பட்ட லூர்தம்மாள்புரம் (ஐஸ் ப்ளான்ட் ரோடு) லூர்தம்மாள்புரம் 2வது தெரு, திரேஸ்புரம் மேட்டுப்பட்டி மற்றும் சென்ட் மேரிஸ் காலனி முதல் கிருஷ்ணராஜபுரம் மெயின் ரோடு வரை வார்டு எண். 17க்குட்பட்ட மேல அலங்காரத்தட்டு (FCI குடோன் அருகில்) வார்டு எண். 4க்குட்பட்ட தனசேகர் நகர் மற்றும் குறிஞ்சி நகர், வார்டு எண் 5க்குட்பட்ட முத்தம்மாள் | 177. அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

காலனி முதல் தெரு வார்டு எண் 3க்குட்பட்ட பாரதி நகர் 5வது தெரு, அன்னை தெரசா நகர் மற்றும் ராஜுவ் நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் வார்டு எண். 21க்குட்பட்ட திரேஸ்புரம் உப்பு உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ரோடு, வார்டு எண். 15க்குட்பட்ட சத்திரம் தெரு அறிஞர் அண்ணா மண்டபம் ரோடு வார்டு எண் 19க்குட்பட்ட பூபாலராயர்புரம் மற்றும் அலங்காரத்தட்டு மெயின் முதல் மேட்டுப்பட்டி ஜங்சன் முதல் தேவாலயம் வரை) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளல் மற்றும் வார்டு எண். 33க்குட்பட்ட டெலிபோன் காலனி பகுதியில் பேவர்ப்ளாக் ரோடு அமைக்கும் பணிக்காக ரூ 5,59,30,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 01.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டு இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 09.10.2018 அன்று திறக்கப்பட்டது. இரண்டு விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்.

1. திரு. ஐ. ஜெயசீலன்
மதிப்பீட்டை விட 0.09% குறைவு (ரூ. 4,67,68,421.50)

2.திரு. வி. தங்கராஜ்
மதிப்பீட்டை விட 5.10% அதிகம் (ரூ. 4,91,95,015.00)

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு தொகையினை விட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. ஐ. ஜெயசீலன் என்பவரின் (மதிப்பீட்டை விட 0.09 % குறைவு (ரூ. 4,67,68,421.50) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

திரு. ஐ. ஜெயசீலன்
மதிப்பீட்டை விட 0.30 % குறைவு (ரூ. 4,66,67,621.50)

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினை விட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. ஐ. ஜெயசீலன் என்பவரின் (மதிப்பீட்டை விட 0.30 % குறைவு (ரூ. 4,66,67,621.50) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

மதிப்பீட்டை விட 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு கொடுத்த திரு. ஐ. ஜெயசீலன் ஒப்பந்தத்தாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

E1/02646/2018

| | | |
|---|---|---|
| | 7. இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி – TURIP 2018-19 பணியில் தூத்துக்குடி மாநகராட்சி கிருபை நகர் வார்டு எண். 48 சி.ஜி.இ. காலனி வார்டு எண்.49 செல்சீனி காலனி உள்பக்க தெரு வார்டு எண். 50 ஜே.எஸ். நகர் வார்டு எண். 54 கதிர்வேல் நகர் வார்டு எண். 47 பிரையண்ட் நகர் 11, 5வது தெரு வார்டு எண். 40 ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி கால்டுவெல் காலனி மெயின் சாலை வார்டு எண். 49 டி.எம்.பி. காலனி டோபிகானா வார்டு எண். 36 ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைக்கும் பணி மற்றும் கால்டுவெல் காலணி மெயின் சாலை ஜங்சன் வார்டு எண். 49 பெருமாள்புரம் குருக்கு தெரு வார்டு எண். 40 ஆகிய பகுதிகளில் பேவர் சாலை அமைக்கும் பணிக்காக ரூ 640.70 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 01.10.2018 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி உறை 09.10.2018 அன்று திறக்கப்பட்டது..<br><br>1. M/s. Immanuel & Co.<br>மதிப்பீட்டை விட 0.30% குறைவு (ரூ. 5,31,45,140.50)<br>2.திரு. R. விஜயகுமார்<br>மதிப்பீட்டை விட 5.05% அதிகம் (ரூ. 5,59,97,259.50)<br>3.திரு. வி. தங்கராஜ்<br>மதிப்பீட்டை விட 3.60% குறைவு (ரூ. 5,13,88,902,00)<br>வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு தொகையினை விட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. வி. தங்கராஜ் என்பவரின் (மதிப்பீட்டை விட 3.60 % குறைவு (ரூ. 5,13,88,902.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.60% குறைவாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு கொடுத்த திரு. திரு. வி. தங்கராஜ் ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>E1/02646/2018 | 178) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **8.**தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் சுய உதவி குழுக்கள் மூலம் பணியாட்கள் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேற்படி பணியை தொய்வின்றி மேற்கொள்ளும் வகையில் மேற்படி பணியில் இடுபடுத்தப்படும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான சுய பாதுகாப்பு சாதனங்கள் (கையுறைகள் 429 ஜோடிகளும், ஆண் பணியாளர்களுக்கு கம்பூட் 170 ஜோடிகளும் முகவுறைகள் 429 எண்ணமும் மற்றும் தொப்பிகள் 429 எண்ணமும் மற்றும் தொப்பிகள் 429 எண்ணம்) ஆகியவற்றை PSB EXPORTS நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். எச்2/4850/17 | **179.** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **9.** தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை, இயக்குநர் (பொ) அவர்களின் 22.02.2018ம் தேதிய ந.க.எண்.359/2017/எ2 கடிதத்தில் கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இம்மாநகராட்சியின் சார்பாக 2017.2018ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பங்குத்தொகையாக ரூ 2,00,000/– செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2017–2018ம் ஆண்டுக்கு இம்மாநகராட்சி சார்பாக ரூ. 2,00,000/– கோவை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி1/118532/2010 | **180)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr><td></td><td>10. தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம்– திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மாநகராட்சி வார்டு பகுதிகளில் 16 நுண் உரக்கிடங்கு அமைத்து டாடா எஸ். (TATA ACE) இலகுரக வாகனம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஏற்கனவே 61 வாகனங்களுக்கு தற்காலிகமாக ஓட்டுநர்கள் பணியமர்த்தப்பட்ட நிலையில் மேலும் 13 மகேந்திர டிப்பர் (TATA ACE) வாகனம் ஐந்தாம் கட்டமாக வாங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களுக்கு ஓட்டுனர்கள் பற்றாக்குறை உள்ளதால் இம்மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் தற்காலிகமாக 13 வாகன ஓட்டுனர்களை பணியமர்த்திக்கொள்ளவும் அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அ.னுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/296/18</td><td>181. அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>11. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “சீர்மிகு நகரம்” (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட “சீர்மிகு நகரம்” (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAII) எண் 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது.<br><br>அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட், அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 0404 நாள் 18.09.2018இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>பணிகளின் பெயர்</td><td>மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்)</td></tr>
<tr><td>1</td><td>மாநகராட்சி பல்வேறு வார்டு பகுதிகளில் 22 எண்ணம் அங்கன்வாடி கட்டிடம் புதியதாக கட்டுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் அமைக்கும் பணி</td><td>144.68</td></tr>
<tr><td>2</td><td>மாநகராட்சி பாளை ரோடு பகுதியில் உள்ள பழைய பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணி</td><td>5340.00</td></tr>
</table></td><td>182) பதிவு செய்யப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்காணும் பட்டியலில்  கண்டுள்ள பணிகளில் வரிசை எண். 2 இல் உள்ள பணியானது 6வது உயர்மட்ட திட்ட அனுமதி குழு கூட்ட நடவடிக்கைகள், நாள் 12.10.2018ல் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.<br>அ) எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளில் வரிசை எண்.2 இல் உள்ள பணிக்கு ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற 6வது உயர்மட்ட திட்ட அனுமதி குழு கூட்ட நடவடிக்கைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>ஆ)மேலும் வரிசை எண் 1க்கான பணிகளுக்கு மேலாண்மை இயக்குநர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட், அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட செயல்முறை மாமன்றத்தின் பார்வைக்கும்இ பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ1/3209/2015 (Bus Ter) | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 23.10.2018